**ஆகஸ்ட் – 07**

# TNPSC துளிகள்

- வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்காவைச் சேர்ந்த அதிகாரிகள் விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக அஸ்ஸாமில் உள்ள காசிரங்கா தேசிய பூங்காவிலிருந்து 4 வயது நிரம்பிய ஒரு காண்டாமிருகத்தைக் கொண்டு வந்துள்ளனர்.
    - 1985 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தப் பூங்காவானது ஒரேயொரு காண்டாமிருகத்தை அப்போது கொண்டிருந்தது. அந்தக் காண்டாமிருகம் 1989 ஆம் ஆண்டில் உயிரிழந்தது.
- "செல் அமைப்பு அல்லது நுண் உயிரியல் மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்வதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல்" பாக்டீரியாவைக் கண்டறிவதற்கான இசைவுறு உணர்வியுடன் கூடிய ஒரு கையடக்கக் கருவியை குவஹாத்தியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு மேம்படுத்தியுள்ளது. மூளைக் காய்ச்சல் போன்ற சிக்கலான நோய்களைக் கண்டறிய இதைப் பயன்படுத்த முடியும்.
    - இது போன்று பாக்டீரியாவை விரைவாகக் கண்டறிவது, சுகாதார நலத்திற்கு மட்டுமல்லாமல் உயிரித் தாக்குதல் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றிற்கும் இக்கருவி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (Securities and Exchange Board of India) சிங்கப்பூர் பங்கு பரிவர்த்தனை நிறுவனம் மற்றும் இந்திய தேசிய பங்குச் சந்தை நிறுவனம் (National Stock Exchange of India – NSE) ஆகியவை கூட்டாக இணைந்து குஜராத்தின் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரமான காந்தி நகரில் செயல்பட ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்த 2 நிறுவனங்களும்" NSE சர்வதேச நிதியியல் சேவை மையம் SG X கனெக்ட்" என்ற வர்த்தகத்திற்கான ஒரு புதிய தளத்தை உருவாக்கவிருக்கின்றன.
- ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று ஹிரோஷிமா தினம் அனுசரிக்கப் படுகின்றது. இது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரின் மீது எனோலா கே என்ற விமானத்திலிருந்து லிட்டில் பாய் என்ற அணுகுண்டு வீசப்பட்டதை நினைவு கூர்கின்றது.
    - இத்தினம் தற்பொழுது போர் எதிர்ப்பு, அணு ஆயுத விவாதங்கள் எதிர்ப்பு மற்றும் அணு ஆயுத சோதனைகள் எதிர்ப்பு ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

# தேசியச் செய்திகள்

## அயோத்தி சமரசப் பேச்சு தோல்வி

- இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியான FM கலிபுல்லா தலைமையிலான 3 உறுப்பனர்களைக் கொண்ட பாபரி மஸ்ஜித் - ராம் ஜென்ம பூமி நிலப் பிரச்சினை தொடர்பான சமரசக் குழுவானது தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இக்குழுவில் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் மற்றும் ஸ்ரீராம் பஞ்சு ஆகியோரும் உள்ளனர்.
- சமரசம் மூலம் ஒரு இணக்கமான தீர்வுக்கு வருவதற்கான முயற்சிகள் தோல்வியடைந்தன.
- எனவே, இந்த வழக்கை இந்திய உச்ச நீதிமன்றம் தினசரி அடிப்படையில் விசாரிக்க

முடிவு செய்துள்ளது.

- இந்த விசாரணையை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியலமைப்பு அமர்வு விசாரிக்கும்.

## சிறைக் கைதிகள் வாக்களிக்க முடியாது

- இந்தியத் தேர்தல் ஆணையமானது (Election Commission of India - ECI) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் சிறைக் கைதிகளுக்கு வாக்குரிமை கிடையாது என்று தில்லி உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.
- வாக்களிக்கும் உரிமையானது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 62ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்ட ரீதியான உரிமை என்று இந்தியத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. மேலும் வாக்களிக்கும் உரிமை ஒரு சட்ட ரீதியான உரிமையாக இருப்பது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது என்று சட்டமும் கூறுகின்றது.
- ECI ஆனது சிறைக் கைதிகளுக்கு வாக்குரிமையை மறுக்கும் அனுகுல் சந்திர பிரதான் "எதிர்" மத்திய அரசு (1997) என்ற வழக்கின் தீர்ப்பையும் மேற்கோள் காட்டியது.

## பழமையான சட்டங்களை நீக்குதல் மற்றும் திருத்துதல் மசோதா, 2019

- பழமையான சட்டங்களை நீக்குதல் மற்றும் திருத்துதல் மசோதா 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- மசோதாவின் முதலாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 68 சட்டங்களை இந்த மசோதா நீக்குகின்றது. அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாகும் :
  - பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம், 1976
  - மோட்டார் வாகனங்கள் (திருத்த) சட்டம், 2001
- சில சொற்களுக்கு மாற்றாக மற்றொரு சொல்லை இடுவது தொடர்பாக 2 சட்டங்களில் சிறிய திருத்தங்களை இந்த மசோதா மேற்கொள்கின்றது. அந்த இரண்டு சட்டங்கள் பின்வருமாறு
  - வருமான வரிச் சட்டம், 1961
  - இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள் சட்டம், 2017

# பொருளாதாரச் செய்திகள்

## நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2019

- நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது நிறுவனங்கள் சட்டம், 2013-ஐ திருத்துகின்றது.

| | **நிறுவனங்கள் சட்டம், 2013** | **2019 – திருத்தங்கள்** |
|---|---|---|
| பெரு நிறுவன சமூகப் பொறுப்பு (CSR - **Corporate Social Responsibility**) | CSR நிதி முழுவதுமாக செலவிடப் படவில்லையெனில் நிறுவனங்கள் தங்களது ஆண்டறிக்கையில் அவை செலவிடப்படாத- | செலவிடப்படாத CSR வருடாந்திர நிதியானது நிதியாண்டின் 6 மாதத்திற்குள் சட்டத்தின் 7-வது அட்டவணையில் (உதாரணம் : பிரதம மந்திரி நிவாரண நிதி) குறிப்பிடப்பட்டுள்ள நிதிகளில் |

| | | |
|---|---|---|
| | தற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும். | ஒன்றிற்கு கட்டாயம் மாற்றப் படுகின்றது. விதிமுறையை மீறினால் அபராதத் தொகை 50,000 முதல் 25,00,000 வரை விதிக்கப்படும். |
| தணிக்கையாளர்களை தடை செய்தல் | நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தைக்காக தேசிய நிதியியல் அறிக்கை ஆணையம் "ஒரு உறுப்பினர் அல்லது நிறுவனத்தை" 6 மாதம் முதல் 10 ஆண்டு காலத்திற்கு பட்டயக் கணக்காளராகப் பணியாற்றத் தடை விதிக்க முடியும். | இந்த மசோதா தணிக்கையாளராக நியமனம் செய்தல் அல்லது நிறுவனத்தின் உள் தணிக்கையாளர் அல்லது நிறுவனத்தின் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிலிருந்து 6 மாதம் முதல் 10 ஆண்டுகள் வரை தடை விதிக்கக் கூடிய தண்டனையைத் திருத்துகின்றது. |
| அங்கீகரிப்பு ஆணையத்தின் மாற்றம் | ஒரு வெளிநாட்டு நிறுவனத்துடன் தொடர்புடைய ஒரு நிறுவனத்திற்கான நிதியாண்டின் மாற்றமானது தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். | அங்கீகரிப்பு அதிகாரங்கள் மத்திய அரசிற்கு மாற்றப்படுகின்றன. |

***வணிகத்தைத் தொடங்குதல்***

- ஒரு நிறுவனம் பின்வருவனவற்றை மேற்கொள்ளாமல் வணிகத்தைத் தொடங்க முடியாது.
    - நிறுவனத்தின் விதிகளுக்கு உட்பட்ட அனைத்துப் பங்குதாரர்களும் அவர் எடுக்க ஒப்புக் கொண்ட பங்குகளுக்குப் பணம் செலுத்தியுள்ளனர் என்பதை உறுதி செய்வதற்கான இணைப்புப் பத்திரத்தை 180 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
    - ஆரம்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் நிறுவனப் பதிவாளரிடம் (Registrar of Companies - RoC) சரி பார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட அதன் முகவரியை சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த விதிகளைக் கடைபிடிக்கத் தவறினால் ROCயிடமிருந்து பெயரை நீக்க முடியும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆர்க்டிக் காட்டுத் தீ

- ஆர்க்டிக் பகுதிகளை அழித்துக் கொண்டிருக்கும் காட்டுத் தீயானது பனிக்கட்டி உருகுதல் மற்றும் நிரந்தரமாக உள்ள பனிப் படலம் உருகுதல் (பெர்மாப்ராஸ்ட்) ஆகியவற்றை அதிகப் படுத்தும் வகையில் மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.
- இது ஆயிரம் ஆண்டுகளாக புதைத்து வைக்கப் பட்டிருந்த பசுமை இல்ல வாயுக்களை வெளியிடும்.
- இந்தக் காட்டுத் தீயின் அளவானது கடந்த 16 ஆண்டு காலத்தில் இல்லாத அளவிற்கு

மிகப்பெரிய அளவில் ஏற்பட்டிருக்கின்றது.

- இந்தக் காட்டுத் தீ பீட் என்ற கரித் தீயை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.
- பீட் என்ற கரியானது அதிக அளவிலான கார்பனைச் சேமித்து வைக்கின்றது. பின்னர் இது எரிந்து அதிக அளவிலான கார்பன் டை ஆக்ஸைடை வளிமண்டலத்திற்குள் வெளியிடுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தான் ஆணவக் கொலை மற்றும் கும்பல் கொலை மசோதா

- ஆணவம் மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் திருமணம் செய்பவர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதைத் தடை செய்யும் மசோதா, 2019 ஆனது இராஜஸ்தான் அரசால் நிறைவேற்றப்பட்டது.
- இது இராஜஸ்தானில் "ஆணவக் கொலை" மற்றும் "கும்பல் கொலை" நிகழ்வுகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடும்ப கௌரவம் என்ற பெயரில் திருமணமானவர்களை கொலை செய்வதற்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிப்பதற்கான விதிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளன.
- கும்பல் கொலைகளைத் தடுப்பதற்காக 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சட்டம் நிறைவேற்றிய முதலாவது மாநிலம் மணிப்பூர் ஆகும். தற்பொழுது இச்சட்டத்தை நிறைவேற்றிய இரண்டாவது மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுஸ்மா சுவராஜ் – மறைவு

- இந்தியாவில் இராஜதந்திர உறவிற்கு ஒத்துணர்வு மற்றும் மனித அணுகுமுறையை கொண்டு வந்ததற்காக பாராட்டப்பட்ட 67 வயது நிரம்பிய முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் காலமானார்.
- சுஸ்மா சுவராஜ் பின்வருவனவற்றில் முதலாவதாகத் திகழ்ந்துள்ளார்.
  - ஹரியானா மாநிலத்தில் இந்தியாவின் இளம் வயது கேபினெட் அமைச்சர் (1977 ஆம் ஆண்டில் அவருடைய வயது 25)
  - 1998 ஆம் ஆண்டில் தில்லியின் முதலாவது பெண் முதலமைச்சர்.
  - நாட்டில் உள்ள தேசிய அரசியல் கட்சியின் முதலாவது பெண் செய்தித் தொடர்பாளர்.
  - இந்திரா காந்திக்குப் பின்பு வெளியுறவுத் துறை அமைச்சராக பதவி வகித்த இரண்டாவது பெண் (2014-19)
  - தலைசிறந்த நாடாளுமன்றவாதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய நாடாளுமன்றத்தின் முதலாவது மற்றும் ஒரே பெண் நாடாளுமன்ற உறுப்பினர்.
  - பிஜேபியின் முதலாவது பெண் முதலமைச்சர், மத்திய அமைச்சர், பொதுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்.
  - சோனியா காந்திக்குப் (1999 – 2004) பின்பு மக்களவையில் எதிர்க் கட்சித்

தலைவராகப் பதவி வகித்த இரண்டாவது பெண் சுஸ்மா சுவராஜ் (2009 – 14) ஆவார்.

# முக்கிய தினங்கள்

## தேசியக் கைத்தறி தினம் – ஆகஸ்ட் 07

- இந்தியா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று தேசியக் கைத்தறி தினத்தை அனுசரிக்கின்றது.
- இத்தினமானது முதன்முறையாக 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 அன்று அனுசரிக்கப்பட்டது.
- பிரிட்டீஷ் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினையை எதிர்த்து போராடுவதற்காக கொல்கத்தா டவுன் ஹாலில் 07–08–1905 அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தை அனுசரிப்பதற்காக ஆகஸ்ட் 07 என்ற தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இத்தினமானது நாட்டில் உள்ள கைத்தறித் தொழிலாளர்களை கௌரவிப்பதற்காகவும் கைத்தறித் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் இந்தியப் பொருளாதாரத்திற்குக் கைத்தறித் தொழிற்சாலைகளின் பங்கை எடுத்துக் காட்டுவதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் தேசியக் கைத்தறி தினத்தின் முக்கிய நிகழ்வானது ஒடிசாவில் உள்ள புவனேஸ்வரில் நடத்தப் படவிருக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★